
# சுவாமி விபுலாநந்தர்
## அருளிய பாடல்கள்



துறவற தின நூற்றாண்டு விழா

(1924 - 2024)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் காரைதீவில் பிறந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் முழு உலகமும் நன்மை பெறும் பொருட்டு 1924ஆம் ஆண்டு துறவறம் எய்தினார். சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றிய விபுலாநந்த அடிகளார் முத்தமிழ் ஆசிரியராகவும் உலகில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கினார். அடிகளார் துறவறம் பூண்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமானது இவ்வருடத்தினை சுவாமி விபுலாநந்தர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளதோடு துறவறத்தின் நூற்றாண்டுக்கான அங்குரார்ப்பன நிகழ்வினைக் கடந்த 23.04.2024ஆம் திகதி சுவாமி அவர்கள் பிறந்த காரைதீவில் உள்ள அவரது சொந்த இல்லத்தில் நடத்தியிருந்தது.

துறவறத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அடிகளாரது ஆக்கங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியினை முன்னெடுத்து வருகின்றோம். அதன் ஒரு அங்கமாகவே தேவை கருதி அடிகளாரது பாடல்களில் ஒரு சில பாடல்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து ஒரு சிறிய நூலாக முதற்கண் வெளியிடுகின்றோம். அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்களுக்கும் உகந்த வகையில் அவர்கள் படித்துப் பயனடையும் வகையில் சில பாடல்கள் மட்டுமே இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்நூல், மதங்க சூளாமணி போன்ற அரிய நூல்களைத் தந்த அடிகளார் பல்வேறு படைப்புகளை இவ்வுலகத்திற்கு ஆக்கியளித்துள்ளார். இவற்றுள் ஒருசில படைப்புகளைத் தவிர ஏனை படைப்புகள் பலராலும் அறியப்பட்டுள்ளன. எனவே, இது போன்றதொரு துறவறதின நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற இந்த ஆண்டில் அடிகளாரது இவ்வாறான படைப்புகளை வெளியிடுவது சிறப்பானதாக அமையும் என நம்புகின்றேன். அவ்வகையில் தான் இந்நூலும் பிரசவமாகின்றது.



*ய. அநிருத்தனன்*
*பணிப்பாளர்*
*இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று


வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீல வானி லே

நிலவு வீச வே

மாலை வேளை யே

மலைவு தீரு வோம்

சால நாடி யே


சலதி நீரு ளே

பாலை பாடி யே

பலரொ டாடு வோம்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்தறிந்து கலைபயின்றோன்
இன்றமிழின் இயனூல்
எத்தனையோ அத்தனையும்
எண்ணியுளங் கொண்டோன்
பழுத்ததமிழ்ப் புலமையினோர்
பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும்புலவன்
கனிந்தகுண நலத்தான்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உன்னை நீ யுண்வா யுணர்ந்திட விறையை

உணர்குவா யுன்னுள்யா னென்ன

மன்னிய தெதுவோ கால்கர முதிர

மாம்வமோ மற்றவ யவமோ

என்ன நன் நாகச் சிந்தை செய் வாயேல்

யானெனைப் படுவதொன் றில்லாத்

தண்மையு முணர்வாய் வெறுமையாய் முடியுந்

சாற்றவே றொன்றிலாத் தகைமை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்த்திரையால் இழுப்புண்ட
குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்தும்
கீழ்விழுந்தும் அலைந்து
சீரக்கரையில் ஏற்றுண்டு
கிடந்தசெயல் நோக்கிச்
"சிந்திக்கின் மானிடர்தம்
வாழ்க்கையிது" வென்றேன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**அங்கணுல கனைத்தினையு மாடரங்க**

**மெனலாகு மவனி வாழும்**

**மங்கையரை யாடவரை நடம்புரியு**

**மக்களென மதித்தல் வேண்டும்**

**இங்கிவர்தாம் பல கோல மெய்திநின்ற**


**நாடகத்தினியல்பு கூறிற்**

**பொங்குமங்க மேழாகிப் போக்கு வர**

**விருக்கையோடு பொருந்து மன்றே.**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வருந்தித்தான் கற்றகல்வி
மாய்ந்து மறைந்திடுமோ
மறுமையிலும் உதவுமோ வான்மதியே
என்றென் திருந்து கல்வி எழுமையுமே
மார்புடைத்தென் றுரைத்த
செம்மொழியைத் தேர்த்தியென
வெண்மதியம் விடுக்க"

இந்துசமய அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தசாமிப் பெயரோன் வேட்களத்திலென்னைக்
கண்ட நாளன்பெனும் கயிறு கொண்டு பிணித்தான்
அந்த நாள், முதலாக நட்புரிமை பூண்டோம்.
அண்மையில் யான் வடநாடு நண்ணியதை அறிந்தே
நம்மடிக ளுறைகின்ற தவப்பள்ளி யாது
நற்றவத்தோர் முகவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி யோலையொன்று விடுக்கச்
சிந்தைவைத்தா னெனவெனக்கோ ரன்பனறி வித்தான்.
ஓரிருநாள் கழியு முன்னர் மார்படைப்பு நோயால்
ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனு மவலவுரை செவியில்
அனற் பிழம்பாய்ப் புகுந்துளத்தை யுருக்கியதப் பொழுதில்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலையணை யுறைக்கொப் பாகச்

சாற்றலா மனிதன் றன்னை

நிலவிய கருமை செம்மை

நிறத்தின வெனினு முன்னே

இலகுபஞ் சென்றே அன்பன்

எழிலிலா னழகன் நூர்த்தான்

உலகினிற் பலரென் றாலு

முள்ளுரைத் தெய்வம் ஒன்றே

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீல நிற விசும்பளவு நெடுங்குடுமி

மலைத்தொடர்கள்

மேல் விழுந்து விளமழையால்

வெள்ளியெனத் திகழ்வனவாம்

காலையினு மாலையினுங்


கதிரவனார் வேதிக்க

மாலவனா ராடையென

வயங்குவபொன் னிறம் படர்ந்தே.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“சீரார் குணதிசையைச் சேர்ந்து
வளர்புகளும் ஏராலி ரியன்றசெந்நெல்
இன் சுவைத்தீங் கன்னலொடு
மட்டக் களப்பென்னும் மாநாடந் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ னாமுகமாய்
ஐங்கரன் கோயி லமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலூட் புகும்நீர் நிலையொன்று
நீர் நிலையி னுள்ளே நிகழ்ந்த வதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவ லிதுவாகும்“



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு வியற் செந்த மிழு மாங்கிலமும்
எனக்குணர்த்தி அறிவு தீட்டி
வம்பு செறி வெண்கலச வல்லியருள்
கூட்டி வைத்த வள்ளல் குஞ்சித்
தம்பி யெனும் பெயருடையோன் தண்டமிழின்
கரைகண்ட தகைமை யோன்றன்
செம்பதும மலர்ப்பதத்தைச் சிரத்திருத்தி
எஞ்ஞான்றும் சிந்திப்பேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலைப் பிரார்த்தனை

நீபணித்த செய்கையினைச் செய்வேன் - நாளும்
நின்னுரையே என்னுரையாய் உய்வேன்
நீநடத்தும் பாதையிலே நடப்பேன் - என்றும்
நின்னருளால் எத்துயரும் கடப்பேன்

நானென ஒன்றில்லையெனக் கொண்டேன் - எங்கும்
நானலநீ நானலநீ கண்டேன்
ஆன இன்பமாக் கடலே தாயே - ஞான
அன்புருவே என்முன் வருவாயே

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org